**B 914** **BTA2**

B.Ed. DEGREE EXAMINATION, DECEMBER 2011

(For the candidates admitted in the academic year 2008-2009)

Optional Subject — TAMIL — Paper II

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் அரைப்பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 2 மதிப்பெண்கள்.

1. தேசியக் கல்வியின் நோக்கங்கள் யாவை?

2. ஒலியன்களைக் காணும் ஐந்து கொள்கைகளைப் பட்டியலிடுக.

3. தகவல் தொடர்பு சாதனங்களின் அடிப்படை நோக்கங்களைக் குறிப்பிடுக.

4. சமுதாயத் தன்மைகளே மொழியில் பிரதிபலிக்கின்றன என்பதை விளக்கி, ஒரு சான்று தருக.

5. சித்திர எழுத்து – குறிப்பு வரைக.

6. தமிழ் நீதிமன்றமொழியாவதால் ஏற்படும் பயன்கள் யாவை?

7. அடியார்க்கு நல்லார் – சிறு குறிப்பு வரைக.

8. சிறுகதைக்குரிய இலக்கணம் யாது?

9. இலக்கியக் கழகங்களின் பயன்கள் யாவை?

10. மொழியில் கற்பித்தல், மொழியைக் கற்பித்தல் – வேறுபடுத்துக.

11. ஆகுபெயர் என்பதற்குச் சான்று தந்து வரையறுக்க.

12. வேற்றுமையை ஒரு சான்றுடன் விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 5 மதிப்பெண்கள்.

13. தகவல் தொடர்பு சாதனங்களுள் மின்வழிச் சாதனங்கள் பற்றி விளக்குக.

14. பண்பாட்டில் பின்தங்கிய வகுப்பினர்க்கான ஈடு செய்யும் கல்வி பற்றி எழுதுக.

15. பேச்சுத் தொடர்பான உறுப்புகளை எழுதி அதன் செயல்பாடுகளை விளக்குக.

16. இளம்பூரணரின் உரைச் சிறப்பு பற்றி எடுத்துரைக்க.

17. கலைச் சொற்களை உருவாக்கும் பொழுது மனதிற் கொள்ளத்தக்க செய்திகள் யாவை?

18. அகன் ஐந்திணைக்குரிய முதற், கரு, உரிப்பொருள்கள் பற்றி எழுதுக.

19. நாவலாசிரியர் அகிலன் அல்லது சிவசங்கரியின் பாத்திரப்படைப்பை ஆய்க.

20. தேசியக் கல்விக் கொள்கையில் ஆசிரியர்தம் பங்கு யாதென எழுதுக.

பகுதி இ — ($2 \times 15 = 30$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

ஒவ்வொரு விடையும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) ''மொழியில் கடன் வாங்கலின் இன்றியமையாமை'' பற்றிக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழியின் அறிதிறன் கூறுகள் பற்றி விரிவாக எழுதுக.

22. (அ) சங்க காலத்திலிருந்து இன்று வரையிலான பெண் கல்வியின் நிலை பற்றியும், பெண்கல்வி முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் செயல்திட்டங்கள் பற்றியும் எழுதுக.

(அல்லது)

(ஆ) கணினி வழி பன்முக ஊடக முறையைப் பயன்படுத்தி, ஒரு மொழியாசிரியராக மாணவர்களிடம் மொழித்திறன்களை நீ எவ்வாறு வளர்ப்பாய் என எழுதுக.

———————